10th August 1963]

விளையாட்டுக் கருவிகளைக் கொண்டுவருவார்கள். அவற்றுக்கான மாடல்கள், டிஸைன்கள், ட்ராயிங்ஸ் எல்லாம் போட்டுக் கொண்டு வருவார்கள். அவற்றைப் பார்த்து சுலபமாகச் செய்ய முடியும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்தத் தொழிற்சாலை உதகமண்டலத்தில் துவக்கப்படுவதாக இருந்தது என நான் அறிகிறேன். அதைத் திடீர் என்று சென்னைக்கு மாற்ற என்ன அவசியம் ஏற்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் சற்றுக் கனவு கண்டிருக்கலாமோ என்னவோ !

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : தலைவர் அவர்களே, பயிற்சிச் சாலையில் எத்தனை பேர் பயிற்சி பெறுவார்கள் ? பயிற்சியில் கால அளவு எவ்வளவு ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஐம்பது பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். ஆறு மாத காலம் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியின்போது 60 ரூபாய் ஸ்டைபெண்டு கொடுக்கப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் அங்கத்தினர் கண்ட கனவை அமைச்சர் அவர்கள் நனவாக்குவதற்கு முயற்சி செய்வார்களா ? (சிரிப்பு.)

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தக் கனவை நானே கண்டால் செய்யலாம் (சிரிப்பு.)

Fire Station (Dharmapuri)

* 96 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to open a fire station at Dharmapuri in Salem District; and

(*b*) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, and

(*b*) It will take some time, as according to the existing Priority List, Fire Stations have to be opened in five other places before a Fire Station is opened at this place.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையங்களை கிராமப் புறங்களுக்கு விஸ்தரிக்க உத்தேசம் உண்டா ? நகரப் புறங்களிலிருந்து கிராமத்திற்குத் தீயணைக்கும் வண்டி வருவதற்குள் பல வீடுகள் எரிந்து சாம்பலாகிவிடுகின்றன. சென்ற தடவை போலீஸ் மானியத்தின் மீது பேசும்போதுகூட நான் குறிப்பிட்டேன். பெரம்பலூர், அரியலூர், குளித்தலை பகுதிகளில் எங்காவது ஓரிடத்தில் ஒரு தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

[10th August 1963

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கிராமப் புறங்களில் தீயணைக்கும் படைக்கு அவசியம் இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், கிராமப் புறங்களைவிட நகரப் புறங்களில் தான் அதிக அவசியம் இருக்கிறது. இன்னும் சில நகரப் பிராந்தி யங்களில் தீயணைக்கும் படை அமைக்கப்படவில்லை. அதை அமைத்துவிட்ட பிறகு, பெரம்பலூர் போன்ற பகுதிகளை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. சீ. ராமசாமி: தீயணைப்பு நிலையங்கள் முனிசிபல் பகுதி களில்தான் இருக்கவேண்டும் என்ற விதி இருக்கிறது. அதைத் தளர்த்தி ஓரளவு பெரிய கிராமங்களிலும் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பு கூறியதுபோல், நகரப் பிராந்தியங்களில் தீயணைப்பு நிலையங்களை அமைத்துவிட்டு, அதற்குப் பிறகு கிராமப் புறங்களில் அமைப்பதுபற்றி எடுத்துக் கொள்ளலாம்.

திரு. மா. இராசாங்கம்: முனிசிபல் நகரங்களில் தீயணைக்கும் நிலையங்களை ஏற்படுத்துவது என்ற அடிப்படையில், கம்பம் முனிசி பாலிடியில் ஒன்றை நிறுவுவதாக இருந்தது. அது இன்னும் நிறுவப்படாமல் தாமதத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுடைய உறுதிமொழிக்குப் பிறகும் கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கம்பத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் வைத்து விடுவோம் என்று அமைச்சர்களில் யாரும் உறுதி கூறவில்லை. நகரப் பிராந்தியமாக இருப்பதால் சீக்கிரமாக அமைக்கப்படும்.

திரு. க. தா. பெருமாள் ராஜு: கோபிசெட்டிப்பாளையம் முனிசி பாலிடியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டு மென்று சர்க்காருக்கு விண்ணப்பம் ஏதாவது வந்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றித் தனிக் கேள்வி வேண்டும். ஆனால், சீக்கிரத்திலேயே முனிசிபல் பகுதிகளிளெல் லாம் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று நான் முன்பே சொன்னேன்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: தீயணைப்பு நிலையங்களை கிராமப் புறங்களில் ஏற்படுத்துவதில் சற்றுத் தாமதம் இருந்தாலும், பஞ்சாயத்து யூனியன் இருக்கும் இடங்களிலாவது ஏற்படுத்துவதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: முன்பு கூறியதுபோல, இன்னும் நகரப் பிராந்தியங்களிலேயே அமைக்க வேண்டியிருக்கின்றன. அது முடிந்த பிறகு கிராமப் புறங்களில் அமைப்பது பற்றி எடுத்துக்கொள்ள வேண்டும்.

10th August 1963]

திரு. இரா. நெடுஞ்செழியன் : பெரிய அளவில் தீயணைக்கும் முயற்சிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பு வசதி இல்லையென்றாலும், ஆங்காங்கு இருக்கும் காவல் நிலையங்களிலுள்ள போலீஸ்காரர்களுக்குத் தீயணைப்பு முறைகளிலும் பயிற்சி அளித்து, சிறிய முறையிலே அந்தப் பணியை ஆங்காங்கே ஏற்றுக்கொள்வதற்குத் திட்டம் தீட்டப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றியெல்லாம் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இப்பொழுது, 100, 150 மைல் தொலைவில் உள்ள இடங்களில் தீயணைப்புப் படையினர் இருந்து கொண்டிருக்கிறார்கள். தீ விபத்து ஏற்பட்டால், தகவல் கிடைத்து வருவதற்குள்ளாக சாம்பலாகி விடுகிறது. ஆகவே, ஐம்பது மைல் தொலைவில் உள்ள இடங்களில் இருக்கக்கூடிய மேஜர் பஞ்சாயத்துப் பகுதிகளில் தீயணைப்புப் படைகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியதுபோல், கூடியவரைக்கும் அதிகமான இடங்களில் தீயணைப்பு நிலையங்களை வைக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

மின் வசதி (கோட்டூர் பஞ்சாயத்து)

* 97 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோட்டூர் பஞ்சாயத்து கூட்டுமன்றத் தொகுதிக்கு மின்வசதி செய்து கொடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

THE HON. SRI R. VENKATARAMAN : Kottur Panchayat which was under the jurisdiction of supply of Messrs. South Madras Electric Supply Corporation Limited, was recently surrendered to be taken over by the Madras State Electricity Board. The Board will consider the extension of supply of electricity to the villages under the Kottur Panchayat Union in due course.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், கோட்டூர் பஞ்சாயத்து யூனியனுக்கு அரசாங்கத்தில் இருந்து கடன் கொடுக்கப்பட்டதா ? கொடுக்கப்பட்டது என்றால் எவ்வளவு ? 9-30 a.m.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது கோட்டூர் பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்திலுள்ள மின்சார விநியோகக் கம்பெனியை மின்சார போர்டார் எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே கடன் கொடுக்க ஒன்றும் அவசியமில்லை. போர்டே அந்த வேலையை எடுத்துக் கொள்ளும் என்று சொல்ல விரும்புகிறேன்.